# குறைகள் - குற்றங்களை ஆதாரத்தோடு சொன்னால்

# எங்கள் ஆட்சி அடுத்த நிமிடமே நடவடிக்கை எடுக்கும்!

## பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் - எதிர்க்கட்சித் தலைவர், உறுப்பினர்களின் பேச்சுக்கு உடனுக்குடன் ஆணித்தரமாக பதில்!

**சென்னை, ஏப். 22 -**

**"குறைகள் - குற்றங்களை ஆதாரத்தோடு சொன்னால் எங்கள் ஆட்சி உடனுக்கு உடன் நடவடிக்கை எடுக்கும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் ஆணித்தரமாகப் பதிலளித்தார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தின்போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர், உறுப்பினர்கள் பேசிய போது உடனுக்குடன் குறுக்கிட்டு ஆணித்தரமாக பதிலளித்து பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களெல்லாம் தூக்கியடிக்கப்படுகிறார்கள் என்ற நிலையிலே உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். யார் அப்படி ... என்பதை அவர்கள் ஆதாரத்தோடு சொல்வார்கள் என்று சொன்னால், நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர் சொல்கிற அந்த அடிப்படையில் நிச்சயமாக ... வேலையெல்லாம் இந்த ஆட்சியில் நிச்சயமாக இல்லை என்பதை நான் அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்கள் ஆதாரத்தோடு சொல்லட்டும். நான் வேண்டாம் என்று சொல்லவில்லையே! குறைகளைச் சொல்வதைக் கேட்பதற்காகத்தான் நாங்கள் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்காகத்தான் மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்து இங்கு வந்து உட்கார வைத்திருக்கிறார்கள். அதனால், தாராளமாக குறைகளைச் சொல்லலாம். ஆனால், சொல்கின்ற குறைகள், குற்றங்கள் எதுவாக இருந்தாலும் ஆதாரத்தோடு சொல்லுங்கள். அடுத்த நிமிடம் நடவடிக்கை எடுக்க இந்த ஆட்சி தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

### இந்த ஆட்சி பழிவாங்கும் ஆட்சி அல்ல!

பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க்கட்சிக் கொறடா, முடிந்து போய்விட்டது என்று சொல்கிறார். மறுபடியும் அதையேதானே அவர் சொல்கிறார். அதனால்தான் அவர் சொல்லவேண்டிய அவசியத்திற்கு ஆளாகிறார். மறுபடியும் எதைச் சொல்வதாக இருந்தாலும் ஆதாரத்துடன் சொல்லட்டும்.

அவரும் முதலமைச்சராக இருந்தவர்தான். காவல் துறையை கையில் வைத்திருந்தவர் தான். அவருக்குத் தெரியாதது எதுவும் இருக்க வாய்ப்பில்லை. ஏதாவது தவறுகள் நடந்திருந்தால் மாற்றப்படுபவர்களே தவிர, உறுப்பினர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் சொன்னது போல ஏதோ தூக்கியடிப்பது, பழி வாங்குவது, அரசியல்ரீதியாக செய்வதெல்லாம் இந்த ஆட்சியில் நிச்சயமாக ஒருபோதும் நடக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஏதாவது குறைகள் இருந்தால், ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் சொல்லுங்கள். மனு வாங்கியிருக்கலாம், படிப்படியாக அவற்றில் எல்லாம் நாங்கள் மாற்றங்களை செய்துகொண்டுதான் இருக்கிறோம். நாங்கள் முகாம்கள் அமைத்து குறைகளைக் கேட்டு விருப்பங்களின் அடிப்படையில்தான் எல்லாமே செய்கிறோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வாராவாரம், 15 நாட்களுக்கு ஒருமுறை முகாம்போட்டு, குறைகளைக் கேட்டு எங்கெங்கு மாற்றம் வேண்டுமென்பதையெல்லாம் தெரிந்துகொண்டு, அந்த அடிப்படையில்தான் மாற்றிக் கொண்டிருக்கிறோமே தவிர, ஏதோ வேண்டுமென்று திட்டமிட்டு எந்த நிலையிலும் மாற்றவில்லை என்பதை நான் அழுத்தம்திருத்தமாக மீண்டும் மீண்டும் சொல்ல விரும்புகிறேன்.

நடந்த கலவரத்திலே, ...என்ற ஒரு கருத்தை இங்கே பதிவு செய்திருக்கிறார். எந்த அடிப்படையில் அதைச் சொல்கிறார்? அதற்கு ஆதாரம் இருக்கிறதா? இல்லையென்று சொன்னால், தயவு கூர்ந்து அவர் கூறிய அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீங்கள் நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது உள்கட்சி விவகாரம். இருந்தாலும், பாதுகாப்பு கேட்ட நேரத்தில், தகுந்த பாதுகாப்புகளைக் கொடுத்தோம். உள்ளே நடந்த சம்பவங்களுக்கு நாங்கள் பொறுப்பாக இருக்க முடியாது; வெளியே பொறுத்தவரை, தகுந்த பாதுகாப்புகளை செவ்வனே கொடுத்தோம்; அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில், இதுபோன்று நாங்கள் உள்ளே அடித்துக்கொள்ளவில்லை. ஆனால், நீங்கள் உள்ளே அடித்துக்கொண்டு, ரகளை செய்து கொண்டீர்கள்; அதனால் ஏற்பட்ட சம்பவம் இது.

இந்தப் பிரச்சினை குறித்து முறைப்படி தமிழக காவல் துறையைப் பொறுத்தவரைக்கும் சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறது. சட்டப்படி வழக்கும் பதிவு செய்திருக்கிறது. இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, குறிப்பிட்டு சொன்னார். நீதிமன்றத்திற்கும் சென்றிருக்கிறது. எனவே, நீதிமன்றம் இதுகுறித்து விசாரித்திருக்கிறது. ஆகவே, என்னைப் பொறுத்தவரையில், இங்கே பிரச்சினை வந்த காரணத்தினால், நான் சொல்ல விரும்புவது, மேற்படி சம்பவம் தொடர்பாக, 14 நபர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டனர். மேலும் 11.7.2022 அன்று, E2இராயப் பேட்டை காவல் நிலையத்தில் குற்ற எண் 190/2022, ச/பி 147, 148, 341, 324, 326, 356, IPC 3 of Act குற்ற எண் 191/2022, 147, 148, 341, 324, 506, IPC குற்ற எண் 192/2022 மற்றும் குற்ற எண் 213/2022 இதர ஆகிய 4 வழக்குகளும் தமிழ்நாடு காவல் துறை இயக்குநர் அவர்களின் உத்தரவின்பேரில் குற்றப்பிரிவு குற்ற புலனாய்வு துறைக்கு மேல் விசாரணைக்காக 29.8.2022 அன்று மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

எனவே, முறைப்படி காவல் துறையைப் பொறுத்தவரையில் வழக்கும் பதிவு செய்திருக்கிறது. உரிய நடவடிக்கையும் எடுத்திருக்கிறது. எனவே, இதில் காவல் துறை எதிலும் தலையிடவில்லை; வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது என்ற செய்திகளெல்லாம் உண்மைக்குப் புறம்பான செய்திகள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றையதினம் இதே அவையில், நம்முடைய அவை முன்னவர் அவர்கள் இங்கே பேசக்கூடிய உறுப்பினர்கள், குறிப்பாக ஆளுங் கட்சியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் SUBJECTஐ மட்டும் பேசுங்கள், கேள்வியை மட்டும் கேளுங்கள், கோரிக்கையை மட்டும் எடுத்துச் சொல்லுங்கள் என்றும், புகழ் பாடுவது, வணக்கம் சொல்வதெல்லாம் வேண்டாம். முதன்முதலாக சட்டமன்றத்திற்கு வந்து கன்னிப் பேச்சு பேசுவதாக இருந்தால் சொல்லுங்கள். மற்றபடி வேண்டாம் என்று தெளிவாக பல முறை சொல்லிவிட்டார், நேற்றைய தினம் உருக்கமாகவே சொன்னார்.

எனவே, ஜோசப் சாமுவேல் அவர்கள் காலையில் என்னிடம் வந்து வாழ்த்து வாங்கும்போது சொல்லி அனுப்பினேன். நீங்கள் பேசினீர்களென்றால், நானே எழுந்து குறுக்கிட்டு அதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு சிபாரிசு செய்வேன் என்று சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையில் பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே புகழ் பாடிய அந்த வார்த்தைகளையெல்லாம் நீக்கிவிட்டு, அவரை SUBJECTல் பேச பணிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

### நிதி நிறுவனங்களின் முறைகேடுகள்

உறுப்பினர் ட்டி. இராமச்சந்திரன் அவர்கள், இங்கே உரையாற்றுகிறபோது நிதி நிறுவனங்கள் செய்து கொண்டிருக்கக்கூடிய முறைகேடுகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக, Aarudhra Gold Trading Private Limited என்ற நிதி நிறுவனம், கடந்த அ.தி.மு.க. ஆட்சி இருந்தபோது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வைப்பீடுகளுக்கு 25 முதல் 30 விழுக்காடு மாத வட்டி என கவர்ச்சிகரமான ஓர் அறிவிப்பை வெளியிட்டு, செப்டம்பர் 2020 முதல் சுமார் 1 இலட்சம் முதலீட்டாளர்களுக்கு சுமார் 2,348 கோடி ரூபாய் முதலீடு மற்றும் வட்டியைத் திருப்பித் தராமல் ஏமாற்றியுள்ளதாக புகார்கள் வந்துள்ளன.

நமது கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான், அந்தப் புகார்களின்மீது பொருளாதார குற்றப்பிரிவு, வழக்குப் பதிவு செய்து, 22 பேர் எதிரிகளாக சேர்க்கப்பட்டு, அவர்களில் இயக்குநர்கள், Agent உள்ளிட்ட 11 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வெளிநாட்டிற்கு தப்பிச் சென்ற Managing Director ராஜசேகர் மற்றும் உஷா ராஜசேகர் ஆகியோரை கைது செய்ய "Red Corner Notice" வழங்கப்பட்டுள்ளது.

### குற்றப்பத்திரிக்கை

மேற்கண்ட எதிரிகள் மீது Look out circular வழங்கப்பட்டுள்ளது. ரொக்கம், வங்கி கணக்குகளில் இருந்த பணம் சுமார் 96 கோடி ரூபாய், 93 அசையா சொத்துகளும் முடக்கப்பட்டுள்ளன. இந்த வழக்கில் விரைவில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

இதேபோல் Hijau, Lns IFS, Elfin Ecom, CVRS



Chits, Rahat Travels உள்ளிட்ட நிதிநிறுவனங்களும் மோசடியில் ஈடுபட்டுள்ளதால், அந்த நிறுவனங்கள் மீதும் கடும் நடவடிக்கையை இந்த ஆட்சி எடுத்திருக்கிறது. குற்றவாளிகளைக் கைது செய்து, அவர்களுடைய சொத்துகள் முடக்கம், வங்கிக் கணக்குகள் முடக்கம் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, முதலீட்டாளர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

இவற்றில் Hijau, Lns IFS, Elfin Ecom, Rahat Travels ஆகிய நிதி நிறுவனங்கள் எப்போது தொடங்கப்பட்டன என்றால், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில்தான் தொடங்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற நிதி மோசடிகளில் ஈடுபட்ட நிறுவனங்களானாலும், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, Lns IFS நிதி நிறுவன மோசடி விவகாரத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. இதுபோன்ற நிறுவனங்களில் முதலீடு செய்யக்கூடிய பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மக்களிடம் ஆசையைத் தூண்டி, இதுபோன்ற நிறுவனங்கள் தற்போது பொதுமக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இத்தகைய நிதி நிறுவனங்கள் அனைத்தையும் கண்காணிக்குமாறு காவல் துறைக்கு நான் கடுமையாக உத்தரவிட்டிருக்கிறேன்.

இத்தகைய நிறுவனங்களின் மோசடியைத் தடுக்க முதன்முதலில் சட்டம் கொண்டு வரப்பட்டது எப்போது என்றால், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதுதான் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லி, இந்த விளக்கத்தை உறுப்பினர் வாயிலாக மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### வேங்கைவயல் பிரச்சினை

உறுப்பினர் வி.பி.நாகைமாலி அவர்கள் வேங்கைவயல் பிரச்சினையைப்பற்றி குறிப்பிட்டு சொன்னார். ஏற்கெனவே இந்த அவையிலே கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து, அதற்கு நான் விளக்கம் தந்திருக்கிறேன். ஆனால், அதற்குப் பிறகு ஏற்பட்டிருக்கக்கூடிய நடவடிக்கைகள், அதில் இருக்கக்கூடிய முன்னேற்றங்களைப்பற்றி அவர் இங்கே கேட்ட காரணத்தால், இந்த அவையிலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளனூர் காவல் நிலைய சரகம், இறையூர் வேங்கைவயல் கிராமத்தில் கடந்த 24.12.2022 மற்றும் 25.12.2022 ஆகிய தினங்களில் 4 குழந்தைகள் உள்பட 5 நபர்களுக்கு வாந்தி மற்றும் காய்ச்சல் ஏற்பட்டு புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். 4 பேர் வெளிநோயாளிகளாக சிகிச்சை பெற்ற நிலையில், கோபிகாஸ்ரீ என்ற குழந்தை மட்டும் தொடர்ந்து சிகிச்சை பெற்றது. மருத்துவர் பரிசோதனையில் மாசடைந்த குடிநீரை பருகியதால் உடல்நலக் குறைவு என்று தெரிய வந்தது. அதற்குப் பிறகு, அந்தக் கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியை வருவாய்த் துறையினர் ஆய்வு செய்திருக்கிறார்கள். அப்போது அந்தத் தண்ணீர் துர்நாற்றம் வீசியதுடன், தொட்டியில் மனிதக் கழிவு கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உடனே அந்தத் தொட்டியிலிருந்த நீர் முழுவதும் வெளியேற்றப்பட்டு மூன்று முறை சுத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட கோபிகாஸ்ரீயின் தந்தை கனகராஜ் 26.12.2022 அன்று கொடுத்த புகாரின் அடிப்படையில் வெள்ளனூர் காவல் நிலையத்தில் அடையாளம் தெரியாத நபர்கள்மீது வன்கொடுமை சட்டப் பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கை விசாரிக்க கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் ஒரு "சிறப்பு விசாரணைக் குழு" அமைக்கப்பட்டது. இக்குழுவினர் தடய அறிவியல் குடிநீர் மாதிரிகளை சேகரித்து, சென்னை தடய அறிவியல் சோதனை மையத்திற்கு நீதிமன்றம் வாயிலாக அனுப்பி வைத்தார்கள்.

### வழக்குப்பதிவு

27.12.2022 அன்று மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் அந்தக் கிராமத்திற்குச் சென்று ஆய்வு மேற்கொண்டார்கள். அப்போது, "கிராமத்தில் உள்ள அய்யனார் கோயிலில் தங்களை வழிபட அனுமதிக்கவில்லை என்றும், ஒரு குறிப்பிட்ட தேநீர்க் கடையில் இரட்டைக் குவளை முறை கடைப்பிடிக்கப்படுவதாகவும்" மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில் உடனே குளத்தூர் வட்டாட்சியர் அளித்த புகாரின் பேரில் அக்கிராமத்தில் தேநீர்க் கடை நடத்தி வரக்கூடிய மூக்கையா மற்றும் அவரது மனைவி மீனாட்சிமீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, மூக்கையா அன்றைய தினமே கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். அன்றைய தினமே ஆதி திராவிடர்கள் அய்யனார் கோவிலில் வழிபட அனுமதிக்கப்பட்டனர். அப்போது சிங்கம்மாள் என்பவர் ஆதி திராவிடர்கள் சாதிப் பெயரைச் சொல்லி அவதூறாகப் பேசியதால், வட்டாட்சியர் அளித்த புகாரின் அடிப்படையில், சிங்கம்மாள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

28.12.2022 அன்று இலுப்பூர் கோட்டாட்சியர் தலைமையில் அமைதி பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்தப் பேச்சுவார்த்தை மூலமாக "மேல்நிலை நீர்த் தொட்டியை அசுத்தம் செய்தவர்கள்மீது விரைவில் நடவடிக்கை; இரட்டைக் குவளை முறையை ஒழிப்பது; அடுத்து, அய்யனார் கோயிலில் அனைத்து சமூக மக்களுக்கு சாதி வேறுபாடின்றி வழிபடுவது" ஆகிய முடிவுகள் அந்தக் கூட்டத்தில் முடிவாக எடுக்கப்பட்டது.

### ஒரு நபர் விசாரணை ஆணையம்

அந்தக் கிராமத்தில் சட்டம்ஒழுங்கு நிலையைப் பராமரிக்க சுழற்சி முறையில் தொடர்ந்து காவல் துறையினர் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டனர். மருத்துவத் துறையினரும் மருத்துவ முகாம் நடத்தியிருக்கிறார்கள்.

சமூக நல்லிணக்கத்தை கடைப்பிடிக்கும் வகையில் 29.12.2022 அன்று அனைத்து சமூகத்தினரும் பங்கேற்ற அமைதி ஊர்வலம் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றிருக்கிறது. இவ்வழக்கு விசாரணையை துரிதப்படுத்த, இந்த வழக்கு மாநிலக் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறைக்கு (சிபிசிஐடி) 14.1.2023 அன்று மாற்றப்பட்டது. இந்நிலையில்தான், இந்த வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றக் கோரி நெடுவாசல் கிழக்கு கிராமத்தைச் சேர்ந்த திருமுருகன் மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்த மனுவில், ஓய்வுபெற்ற நீதியரசர் சத்தியநாராயணன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையத்தை அமைத்து, விசாரணை அறிக்கையை 2 மாதங்களுக்குள் அளிக்க சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

வேங்கைவயல் விவகாரத்தில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க, அந்தக் கிராமத்தில் தீண்டாமையை ஒழிக்க, அனைத்து தரப்பு மக்களிடையே அமைதியை நிலைநாட்ட, இந்த அரசு மிகத் துரிதமாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. அந்த வகையில், இப்போது நியமிக்கப்பட்டிருக்கும், ஓய்வு பெற்ற நீதியரசர் அவர்களின் ஒரு நபர் விசாரணை ஆணையத்திற்கு இந்த அரசு அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு ஓர் அரசாணையையும் வெளியிட்டிருக்கிறது என்பதையும் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொடங்குகின்றபோதே 3 மணிக்கு மேல் ஆகிவிட்டது, நாங்களெல்லாம் இவ்வளவு நேரமாக இருந்து பேச வேண்டியிருக்கிறது என்று வருத்தப்பட்டார்கள். குறுக்கிட வேண்டாம் என்றுதான் நானும் கருதி இருந்தேன். நாளை பதில் சொல்கின்றபோது விளக்கமாக பதில் சொல்லலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால், இப்போது இரண்டு ஆண்டு காலமாக சட்டம்ஒழுங்கு மோசமான நிலையில் இருக்கிறது என்பதை அவர் இங்கே பதிவு செய்திருக்கிறார்.

நான், அவருக்கு தெரிவிக்க விரும்புவது, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் இன்றைக்கு தமிழ்நாடு காவல் துறை மிக சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டு மென்று சொன்னால், ஜல்லிக்கட்டு, மதுரை சித்திரைத் திருவிழா, விநாயகர் சதுர்த்தி, தேவர் குருபூஜை, இமானுவேல் சேகரன் நினைவு நாள், திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா, தைப்பூசத் திருவிழா, திருவாரூர் தேர் திருவிழா என அனைத்து விழாக்களும் எவ்வளவு அமைதியாக, சுமுகமாக நடைபெற்றது என்பது நாட்டிற்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

அமைதிப் பூங்காவாக தமிழ்நாடு!

சாதி மோதல்கள், மத கலவரங்கள், போலீஸ் துப்பாக்கிச் சூடு, கள்ளச் சாராய சாவு, இரயில் கொள்ளையர்கள், வட மாநில கொள்ளையர் அட்டகாசம், தொழிற்சாலை போராட்டங்கள் என வழக்கமான சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் இன்றைக்கு இந்த திராவிட மாடல் ஆட்சியை பொறுத்தவரையிலே அவைகளெல்லாம் முறையாக தடுக்கப்பட்டு, தமிழ்நாடு இன்றைக்கு அமைதிப் பூங்காவாக விளங்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய பிரதமர் அவர்கள் சமீபத்தில் 8.4.2023 அன்று சென்னை வந்தபோதும், குடியரசுத் தலைவர் அவர்கள் 18.2.2023 அன்று கோவை வந்தபோதும், 18.3.2023 அன்று கன்னியாகுமரி வந்தபோதும், ஜனவரி மாதம் முதல் சென்னை, கோவை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஜி20 மாநாடு நிகழ்ச்சி நடைபெற்றிடவும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து, மிகப் பெரிய பாராட்டுதல்களை இந்த காவல் துறை பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்ல வேண்டுமென்றால், முதன்முதலில் "ஆப்பரேஷன் ரவுடி வேட்டை" நடத்தப்பட்டு 6,112 பேர் கைது செய்யப்பட்டு, 3,047 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, எதற்காக இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதில் இந்த அரசு எவ்வளவு முன்னுதாரணமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இவைகளெல்லாம் ஓர் அடையாளம். இன்னும் சொல்லப் போகிறேன். இன்னும் தெளிவாக உங்களுக்கு புள்ளிவிவரத்தோடு சொல்ல வேண்டுமென்றால், இதனால் 2020ல் ஐ.பி.சி குற்றங்கள் 8 இலட்சத்து 91 ஆயிரத்து 696 ஆக இருந்து, 2022ல் வெறும் 1 இலட்சத்து 94 ஆயிரத்து 97 வழக்குகளாக குறைந்துள்ளன.

2020ல் 1 இலட்சத்து 68 ஆயிரத்து 629 மதுவிலக்குச் சட்டத்தின் கீழான வழக்குகள் 2022ல் 1 இலட்சத்து 55 ஆயிரத்து 489 ஆக குறைந்திருக்கிறது.

2019ல் 1,678 ஆக இருந்த கொலைச் சம்பவங்கள் 2022ல் 1,597 ஆக குறைந்திருக்கிறது.

2018ல் பெண், சிறுமி கடத்தல் 907 வழக்குகள். ஆனால், 2022ல் அது 535 ஆக குறைந்திருக்கிறது.

### அனைவரும் விரும்பி வாழும் தமிழ்நாடு!

2018ல் பெண்களுக்கு எதிரான வரதட்சணைக் கொடுமை 55 வழக்குகள். ஆனால், 2022ல் அது 29 ஆக குறைக்கப்பட்டுள்ளது. 2018ல் லாட்டரி சீட்டு விற்பனை வழக்குகள் 4,694. ஆனால், 2022ல் இது 3,966 ஆக குறைக்கப் பட்டுள்ளது. ஆக, கொலைக் குற்றங்கள் குறைந்திருக்கின்றன.

கொள்ளை, கன்னக்களவு எல்லா குற்றங்களுமே குறைக்கப்பட்டுள்ளன.ஆகவே, அ.தி.மு.க. ஆட்சியில் கைவிடப்பட்ட சட்டம்ஒழுங்கு தி.மு.க. ஆட்சியில் நிலைநாட்டப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே அனைவரும் விரும்பி வந்து வாழும் மாநிலமாகத் நம்முடைய தமிழ்நாடு இன்றையதினம் அமைதிப் பூங்காவாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் தி.மு.க. ஆட்சி; அதற்குக் காரணம் இந்தத் திராவிட மாடல் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இந்தக் காவல் துறைதான் சிறப்பான பணியை நிறைவேற்றித் தந்திருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளையும் வைத்திருக்கிறார்கள்; பல்வேறு குற்றச்சாட்டு களையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றிற்கெல்லாம் நான் நாளைக் காலையில் பதிலுரையாற்றவிருக்கிறேன். ஒருவேளை அவர்கள் வெளிநடப்புச் செய்யாமல் இந்த அவையில் இருந்தால், அப்பொழுது கேட்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும், திருநெ ல்வேலி, அம்பாசமுத்திரத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டு, காவல் துறை அதிகாரி, பல்வீர்சிங் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை, இந்த அரசின்மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் (குறுக்கீடு) சரி, CCTV கேமராக்கள் சரியாக இயங்கவில்லை என்ற செய்தி வந்ததாக, அதையும் உறுதி செய்து சொல்லவில்லை; செய்தி வந்ததாக என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக, நான் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

### அம்பாசமுத்திரம் நிகழ்வு

அம்பாசமுத்திரம் நிகழ்வு குறித்து சமூக வலைதளங்களில் புகார்கள் வந்தவுடனே அங்கு பணியாற்றிய உதவி காவல் கண்காணிப்பாளர் திரு பல்வீர்சிங் 26.3.2023 அன்று காத்திருப்பு பட்டியலுக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அதைத் தொடர்ந்து PSO பிரிவு 151ன் இந்த புகார் நிர்வாகத் துறை நடுவர் (Executive Magistrate) மற்றும் சார் ஆட்சியர் சேரன்மாதேவி ஆகியோர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

இதற்கிடையில் உதவி காவல் கண்காணிப்பாளர் 29.3.2023 அன்று பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த நிகழ்வு தொடர்பாக ஓர் உயர் அதிகாரி தலைமையில் விசாரணைக்கு உத்தரவிடப் பரிந்துரைத்ததன் அடிப்படையில், திருமதி பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்கள் உயர்மட்ட விசாரணை அதிகாரியாக நியமிக்க ப்பட்டார். இதற்கிடையில் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் பல்வீர்சிங் மீது 17.4.2023 அன்று குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உயர்மட்ட விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்ட திருமதி அமுதா,I.A.S., அவர்கள் 4 நாட்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் முகாமிட்டு நடத்திய விசாரணையின் அடிப்படையில், CCTV Cameraவில் பதிவாகியிருக்கக்கூடிய ஆதாரங்களனைத்தையும் அடிப்படையாகக் கொண்டு, நேற்றையதினம் ஓர் இடைக்கால அறிக்கையை அரசிற்கு சமர்ப்பித்திருக்கிறார். அவரது அறிக்கையின் அடிப்படையில் தான், நேற்றிரவு CBCID விசாரணைக்கு இந்த வழக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நான் விளக்கிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொடர்ச்சி 7 ஆம் பக்கம்

## சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுவதில் காவல் துறை சிறப்பாக இயங்குகிறது!

## பொள்ளாச்சி சம்பவம்: உண்மைக் குற்றவாளிகள் தண்டனை பெறுவது நிச்சயம்!

## முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலை அமைக்கப்படும் என அறிவிப்பு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு வி.பி.சிங் குடும்பத்தினர் நன்றி!

**டெல்லி, ஏப். 22 -**

**சமூக நீதிக்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து குரல் கொடுத்துவருவதாக வி.பி.சிங் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.**

முன்னாள் பிரதமர் வி.பி.சிங்கின் மனைவி சீதா குமாரி, பேத்திகள் அத்ரிஜா மஞ்சரி சிங், ரிச்சா மஞ்சரி சிங் ஆகியோர் டெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தனர்.

அப்போது பேசிய அவர்கள் தமிழ்நாடு அரசுதான் முதல் முறையாக வி.பி.சிங் சிலையை அமைத்துள்ள



தாகவும், சமூக நீதிக்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடர்ந்து குரல் கொடுத்து வருவதாகவும், இப்பணியை அவர் தொடர வேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.